# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය-පරීක්ෂණය 300 මට්ටම - පෙබරවාරි 2022
கலைத்தேர்வுப் பரீட்சை - )வெளிவாரி–புதிய பாடத்திட்டம் (300 வது தேர்ச்சி மட்டப் பரீட்சை – பெப்ரவரி 2022
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – February - 2022**

**TLGE 301 – Classical Literature in Tamil**
**தமிழில் செவ்வியல் இலக்கியம்**

කාලය පැය (03) තුනයි.
மூன்று( 03) மணித்தியாலங்கள்
**Time three (03) Hours.**

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்.
**Marks will be deducted for illegible hand writing.**

ප්‍රශ්න 5 ට පිළිතුරු සපයන්න'
5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
**Answer 5 questions only.**

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 8 කි
இந்த வினாப்பத்திரத்தில் 8 வினாக்கள் உள்ளன.
**There are 8 questions in the question paper.**

---

1. பின்வரும் செய்யுட்களைச் சங்ககாலப் பின்னணியை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

அ)

தென்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே

ஆ)

அதுகொல் தோழி காம நோயே
வதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை
உடைதிரைத் திவலை அரும்பும் தீம்நீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தென
பல்இதழ் உண்கண் பாடு ஒல்லாவே

(20 புள்ளிகள்)

2. ஐங்குறுநூற்றில், மருதத்திணை வேழப்பத்தில், ஓரம்போகியாரின் அணிக்கையாட்சித் திறனை ஆராய்க.

(20 புள்ளிகள்)

3. "சங்ககாலச் சேர மன்னர் குறித்த செய்திகளை அறிந்துகொள்வதோடு, புதுவகை இலக்கிய அமைப்பின் தொடக்கமாகவும் பதிற்றுப்பத்து விளங்குகிறது." - இக்கூற்றினைப் பதிற்றுப்பத்தின் ஆறாம்பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை, காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பாடல்களை ஆதாரமாகக்கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

4. கானல்வரி, இளங்கொவின் அதி உன்னத கவியாற்றலைப் புலப்படுத்துமாற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

5. “நிலையாமைக் கோட்பாட்டின் அழகியல் வெளிப்பாடே நாலடியார்” - இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை

(20 புள்ளிகள்)

6. தருக்க ஒழுங்கில் அறமுரைக்கும் வள்ளுவரது இயல்பை, திருக்குறள் ஒழிபியலின் முதல் ஐந்து அதிகாரங்களை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

7. புறநானூற்றுப் போர்களில் வேந்தர்களது வீரத்தைப் புலப்படுத்த விரும்பிய புலவர்கள், அவலமான போரையும் அழகியல் நிறைந்ததாகப் படைத்தனர்’ – அலசுக.

(20 புள்ளிகள்)

8. குறுந்தொகைப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு, சங்ககாலப் புலவர்கள் அகத்திணை அம்சங்களைக் கையாண்ட முறைமை பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)